


# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# பால்வளம்

## மானியக் கோரிக்கை எண். 8

## அறிவிப்புகள்
## 2021–2022

காலநடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# பால்வளம்

மானியக் கோரிக்கை எண்.8

அறிவிப்புகள்
2021 – 2022

**சா.மு. நாசர்**
பால்வளத் துறை அமைச்சர்

**1. பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

தற்போது மாதம் ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஈரோட்டில் உள்ள கால்நடை தீவன ஆலையிலிருந்து 3,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் இதர கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 6,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

தென் மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை,

திண்டுக்கல் மற்றும் இதர மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



**2. சேலம் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய இனிப்பு இல்லாத பால்கோவா தயாரிக்கும் நவீன மற்றும் தொடர்ச்சியான உற்பத்திக்கான இயந்திரங்களுடன் கூடிய அலகு ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடனும், அதிகரித்து வரும் நுகர்வோர் தேவையை கருத்தில் கொண்டும் பாலை அடிப்படையாக கொண்ட இனிப்புகள் தயாரிக்க சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலுள்ள பால்பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் இனிப்பு இல்லாத பால் கோவா தயாரிக்கும் அலகு ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**3. நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான மோர், பாக்கெட் தயிர் மற்றும் கப் தயிர் தயாரிக்கும் அலகு நவீன இயந்திரங்களுடன் காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களின் அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டும், ஒன்றியத்தின் விற்பனை வருவாயை அதிகரித்திடவும், நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான மோர், பாக்கெட் தயிர் மற்றும் கப் தயிர் தயாரிக்கும் அலகு ஒன்று நவீன இயந்திரங்களுடன் ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.



**4. அம்பத்தூர், சோழிங்கநல்லூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால் பண்ணைகளில் திரட்டுப்பால் (Condensed Milk) தயாரிக்க நவீன சவ்வூடு வடிகட்டுதல் தொழில் நுட்பத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

பல்வேறு பால் வகைகள், பால் பாக்கெட்களாக தயாரிக்கப்படும் போது பாலின் தரம், மணம் மற்றும் சத்துப் பொருட்கள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் தயாரிக்கப்படுவது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் அம்பத்தூர், சோழிங்கநல்லூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால் பண்ணைகளில் நவீன சவ்வூடு வடிகட்டுதல் தொழில்நுட்பத்துடன் திரட்டு பால் (Condensed Milk) தயாரிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**5. பால் பொருட்கள், சிப்பம் கட்டும் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களுக்கான ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்விற்கான ஆய்வுக்கூடம் ஆகியன அம்பத்தூர் பால்பண்ணையில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

பால் மற்றும் பால் பொருட்கள், சிப்பம் கட்டும் பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்யவும், உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) வழிகாட்டுதலின்படி பால் பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்யவும், நுண்ணுயிரியல் பகுப்பாய்விற்கான ஆய்வுக் கூடத்தினை நிறுவவும், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கப் பணிகளை மேற்கொள்ளவும் அம்பத்தூர் பால்பண்ணையில் அதிநவீன உபகரணங்களுடன் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



**6. பால் உற்பத்தியாளர்கள், சங்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பால் உற்பத்தி தொடர்பான பயிற்சிக்காக விழுப்புரம், மாதவரம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.**

ஒன்றியம் மற்றும் இணைய பயிற்சி நிலையங்கள், அதனுடன் இணைந்துள்ள பால் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அலுவலர்களுக்கு அவ்வப்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப திறனை புத்தாக்கம் செய்வது அவசியமாகிறது. எனவே, மாதவரம் மற்றும் விழுப்புரம், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பயிற்சி நிலையங்கள் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

**7. முதல் முறையாக உறுப்பினர்களுக்கு கால்நடை பராமரிப்பு குறித்து குரல் ஒலி (Voice Message) மற்றும் குறுஞ்செய்தி (Text Message) வாயிலான இலவச சேவை அறிமுகப்படுத்தப்படும்.**

ஆவின் மற்றும் இப்கோ கிஸான் நிறுவனம் இணைந்து ஆவினுக்கு பால் வழங்கும் 4 இலட்சத்து 25 ஆயிரம் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் தரமான பால் உற்பத்தி, கறவை மாடுகள் பராமரிப்பு மற்றும் நோய் தடுப்பு குறித்து தொழிற்நுட்ப வல்லுநர்கள் கொண்ட குழுவின் ஆலோசனைகள் குறுஞ்செய்தி (Text Message) மூலமாகவும், குரல் ஒலி (Voice Message) செய்தியாகவும் தமிழக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

இதனால் கால்நடை மேலாண்மை குறித்த தகவல்களை அவர்களிடம் நேரடியாக கொண்டு செல்வதன் மூலம் தரமான, நோயற்ற கால்நடைகள் பராமரிப்பிற்கான விவரங்கள் உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து வழங்கிட உதவியாக இருக்கும்.



**8. ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை முறையில் சீர்திருத்தம் மற்றும் விற்பனை விரிவாக்கம் செய்து அதிக இலாபத்தை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

பால் பவுடர் மற்றும் வெண்ணெய் மொத்த விற்பனை முறையில் சீர்திருத்தம் செய்யப்படும். பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிப்பதற்காக, ஆவின் முகவர்களை நியமனம் செய்ய ஒற்றை சாளரமுறை நடைமுறைப் படுத்தப்படும். அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது இரசீது வழங்கப்படும்.

புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும். சந்தையிலுள்ள பால் பொருட்களின் மதிப்பு கூட்டப்படும். பால் பொருட்களின் விலையை இதர நிறுவனங்களின் பால் பொருட்களின் விலையோடு ஒப்பிட்டு, விலை மாற்றியமைக்கப்படும்.

பிற மாநிலங்களில் ஆவின் பால் மற்றும் ஆவின் பொருட்களின் விற்பனையை விரிவாக்கம் செய்தல், வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்ய வணிக ஏற்றுமதியாளர்களை நியமனம் செய்தல், ஆவின் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்ய கூடுதலாக சில்லரை விற்பனையாளர்களை நியமித்தல், கல்லூரி, விடுதிகள், மருத்துவமனைகள், வழிபாட்டு தலங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தல் ஆகியன மேற்கொள்ளப்படும்.

மேலும், மின் வணிக நிறுவனங்கள், உணவகங்கள், பால் பொருள் அங்காடிகள் மற்றும் அடுமனைகளில் விற்பனையை அறிமுகப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களுக்கு சீரான வடிவமைப்பு கொள்கையை உருவாக்குதல், விற்பனையாளர்களின் நியமன விதிமுறைகளை தளர்த்தி கூடுதலாக புதிய சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்களை நியமனம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் விற்பனையை அதிகரிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு பால்வளத்துறை செயல்படும்.



**9. மின்ஆளுமை (e-Governance) முறையினை கையாண்டு சிக்கனம் மற்றும் நிர்வாகத்தை செம்மைப்படுத்தும் முறைகள் செயல்படுத்தப்படும்.**

பால்வளத் துறையின் செயல்பாடுகளை மின்னணுமயமாக்குதலை குறிக்கோளாகக் கொண்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உடனடி பால் மதிப்பாய்வு மற்றும் உறுப்பினர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்குதல் (Spot Acknowledgement) மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வாயிலாக பால்பணப் பட்டுவாடா ஆகியன செயல்படுத்தப்படும்.

இணைய வழி மூலமாக பால் அட்டை விற்பனை செய்யப்படும். இணைய வழியில் உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர்களிடம் பின்னூட்டம் (Feedback) மற்றும் குறைகள் அறியப்பட்டு நிவர்த்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அனைத்து பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் பண்ணைகளில் கண்காணிப்பு கருவி (CCTV Surveillance) மூலம் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து ஊழியர்களுக்கும் முகப் பதிவு (Face Detection) கருவி மூலம் வருகைப்பதிவு மேற்கொள்ளப்படும்.

ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியாக புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை அமைப்பின் இணைய வழி விற்பனை (e-Auction) மூலம் பால்பவுடர், வெண்ணெய் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களுக்கான விற்பனை மேற்கொள்வதைப் போன்று இதர பால் பொருட்களையும் இவ்வமைப்பின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 10. பால்வளத் துறையில் அதன் தொடர் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், செயலிழந்த சங்கங்கள் புதுப்பிக்கப்படும். இதன் மூலம் கூடுதலாக பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கவும் அதன் மூலம் பால் கொள்முதலை அதிகரிக்கவும் வாய்ப்புகள் உருவாக்கப்படும். அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கும் பொதுவான துணை விதிகள் உருவாக்கப்படும். மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு தீர்வு காணப்படும்.

புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உருவாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ஆவின் நிறுவனத்தில் உள்ள மேலாளர் வரையிலான பதவியிடங்கள், அரசு ஆணை பெற்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலமாக தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**11. 60 தானியங்கி பால் கறக்கும் கருவிகள் வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூபாய் 36 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.**

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் பலனடையும் விதத்திலும் தூய பால் உற்பத்தியினை மேம்படுத்தும் வகையிலும் 60 தானியங்கி பால் கறக்கும் கருவிகள் (Single Bucket) ரூபாய் 36 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

**12. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் வழங்கும் பாலினை பகுப்பாய்வு செய்து உடனே பாலின் தரம் மற்றும் பாலின் மதிப்பிற்கு இரசீது வழங்க 453 பால் பகுப்பாய்வு கருவிகள் ரூபாய் 2 கோடியே 26 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.**

பால் உற்பத்தியாளர்களின் நலனை கருதி, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்குகின்ற பால் உற்பத்தியாளர்களின் பாலிலுள்ள மொத்த சத்துக்கள் அடிப்படையில், வெளிப்படை தன்மையுடன் பாலிற்கு உண்டான விலையினை வழங்குவதற்கு காஞ்சிபுரம் – திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நீலகிரி, திருச்சி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு ரூபாய் 2 கோடியே 26 இலட்சம் மதிப்பில் 453 பால் பகுப்பாய்வு கருவிகள் வழங்கப்படும்.



**13. பாலின் தரத்தை மேம்படுத்த, பால் கேன்களை குளிர்விக்கும் 40 இயந்திரங்கள் ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்.**

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்கின்ற பாலை உடனடியாக குளிர்வித்து அதன் ஆரம்ப தரத்தினை கெடாமல், வெகு தொலைவிலுள்ள குளிரூட்டும் நிலையம் அல்லது தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்களுக்கு கொண்டு சேர்க்க பால் கேன்களை குளிர்விக்கும் 40 இயந்திரங்கள், காஞ்சிபுரம்–திருவள்ளூர், கடலூர், வேலூர் மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

**14. வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தேவைக்காக 2 குளிர்காப்பு வாகனங்கள் (Puffed vehicle) மற்றும் 3 குளிர்சாதன வசதி வேன்கள் (Refrigerated Mini Van) ஆகியன ரூபாய் 88 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.**

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள நுகர்வோர்கள் பலனடையும் விதத்தில் பால் மற்றும் ஐஸ்கிரீம், குல்பி மற்றும் நறுமணப்பால் போன்ற பால் பொருட்களை தொலை தூரங்களுக்கு கொண்டு செல்ல உதவும் வகையில் 2 குளிர்காப்பு வாகனங்கள் (Puffed vehicle) மற்றும் 3 குளிர்சாதன வசதி வேன்கள் (Refrigerated Mini Vans) ஆகியன ரூபாய் 88 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.



**15. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் முக்கியமான சேவைகளுள் ஒன்றாக அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று கால்நடைகளுக்கு இலவச மற்றும் அவசர சிகிச்சை வசதிகளை ஏற்படுத்த 162 நடமாடும் கால்நடை மருத்துவ வழித்தடங்கள் ரூபாய் 6 கோடியே 80 இலட்சம் மதிப்பில் அமல்படுத்தப்படும்.**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பால் வழங்குகின்ற பால் உற்பத்தியாளர்களுடைய கறவை மாடுகளுக்கு இலவச சிகிச்சை, இனப்பெருக்க வசதி மற்றும் அவர்களுக்கு தூய முறையில் பால் உற்பத்தி பயிற்சி, சமச்சீர் தீவனம், தாது உப்பு கலவை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பற்றிய ஆலோசனைகள் ஆகியன வழங்குவதற்காக

கால்நடை மருத்துவ வழித்தடங்களில் 162 கால்நடைமருத்துவ ஆலோசகர்களைரூபாய் 6 கோடியே 80 இலட்சம் திட்ட மதிப்பில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.



**16. தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உள்ள பழைய கட்டடத்தில் தற்போது இயங்கி வரும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று பால் தொகுப்பு குளிர்விப்பான்களை புதிய கட்டடத்தில் மாற்றம் செய்ய ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டித்தரப்படும்.**

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் தற்சமயம் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் செயல்பட்டு வருகின்றன. சங்க கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகவும், பால் டேங்கர்கள் (Milk Tanker) உள்ளே சென்று வருவதற்கு போதிய இடவசதி

இல்லாத காரணத்தினாலும் மேற்கூறிய மூன்று பால் குளிர்விப்பான்களை தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சொந்தமான மன்னார்குடி நகராட்சிக்கு உட்பட்ட மேலப்பாலம் அருகில் மாற்றி அமைத்திட ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

**சா.மு. நாசர்**
பால்வளத் துறை அமைச்சர்